IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO. 77/2021

Deposition of Witness : PW - 1

Name : சாந்தமூர்த்தி

Father's Name /W/o : ஏகநாதன்

Religion : இந்து

Caste : -

Calling : -

Address : களத்தூர் கிராமம் நெமிலி வட்டம்,

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 13.03.2023.

கு.வி.தொடர்ச்சி

1. பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதலில் தைப்பொங்கல் 1957ல் குடும்ப ஏற்பாடு நடந்து அதில் என் தாத்தா ஆறுமுகம், அவரின் சகோதரரும் பிரதிவாதிகளின் தகப்பனாருமான ஏழுமலை, சகோதரிகள் நாகம்மாள், தாயார் சின்னகன்னம்மாள் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் சர்வே எண்.105/1ல் 2.11 ஏக்கரில், ஆறுமுகத்திற்கும் ஏழுமலைக்கும் சரிபாதி என்றும், அதில் மேல் பாகம் ஒரு ஏக்கர் ஐந்தரை செண்ட ஆறுமுகத்திற்கு ஒதுக்கி அவருக்கு சுவாதீனம் கொடுக்கப்பட்டது என்றாலும், அதேபோல் ஏழுமலைக்கு கீழாண்டை அதே ஒரு ஏக்கர் ஐந்தரை செண்ட் என்று அவருக்கு ஒதுக்கப்பட்டு வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் அவர்கள் சுவாதீனம் கொடுக்கப்பட்டு அவரவர் பாகத்தில் அனுபவத்தில் உள்ளார்கள் என்ற சங்கதியை மறுத்து நான் என் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. இந்த பதில் உரையில் கண்டுகள்ள சங்கதிகள் எதையும் மறுத்து தவறு என்று பிரமாணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை.

2. தாவா பத்தி 6ல் பிரதிவாதிகள் குத்தகைக்கு விடச்சொல்லி கேட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆம். அதே பத்தியில் நாங்கள் அதற்கு அனுமதி கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆம். இதில் குத்தகை சரியா அனுமதி சரியா என்றால் உறவினர் என்பதால்

வாடகை இல்லாமல் பயிர் செய்ய அனுமதி கொடுத்தோம். என் தாவாப்படி பிரதிவாதிகள் தான் அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் இல்லை எங்கள் அனுபவத்தில் தான் உள்ளது. அவர்கள் தான் 2013ல் பயிர் செய்து வருகிறார்கள் என்று சாட்சி கூறிவிட்டு பிறகு தவறாக சொல்லிவிட்டதாகவும், 2018 முதல் பயிர் செய்வதாக கூறுகிறார். வா.சா.ஆ.5 வழக்கறிஞர் அறிவிப்பிலோ, தாவாவிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ அவ்வாறு கொடுக்கப்பட்ட அனுமதியை ரத்து செய்து விட்டதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எங்கள் சொத்து பயிர் வைக்க வேண்டாம் என்று வாய்மொழியாக சொல்லிவிட்டோம்.

3. வா.சா.ஆ.5 வழக்கறிஞர் அறிவிப்பில் 7 நாட்களில் காலி செய்து சுவாதீனம் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டுள்ளதற்கு அவர்கள் காலி செய்து ஒப்படைக்கவில்லை என்றால் ஒப்படைக்கவில்லை. நிலம் பயன்படுத்தாமல் முள் புதராக உள்ளது. பயன்படுத்தப்படாமல் முள் புதராக உள்ளது என்று தாவாவிலோ பிரமாண வாக்குமூலத்திலோ கூறியுள்ளேனா என்றால் இல்லை. அறிவிப்பில் கண்டுள்ள சொத்திற்கு கீழாண்டை உள்ள சொத்து நாகப்பனுக்கு சொந்தமான சொத்து என்றால் ஆம். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் நாகப்பன் என்பவர் கிருஷ்ணவேணிக்கு ஒரு அடமானப்பத்திரம் எழுதிக் கொடுக்கும்போது அதில் கிழக்கு பக்கம் ஏழுமலை நிலம் என்று காட்டியுள்ளார் என்றால் அதில் உள்ள செக்குபந்தி தவறு அந்த ஆவணம் யார் எழுதியுள்ளது என்று தெரியாது.

4. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.10 கிஸ்து ரசீது மேலாண்டை பக்கம் நாங்கள் அனுபவத்தில் உள்ளதற்கும், கீழாண்டை பக்கம் அவர்கள் அனுபவத்திற்கும் கொடுக்கப்பட்ட ரசீது என்றால் எங்கள் மொத்த சொத்திற்கும் ஒரே ரசீது தான் கொடுக்கப்பட்டது. தாவா மொத்த சொத்திற்கும் போடப்பட்டுள்ளதா என்றால் மொத்த சொத்திற்கும் போடவில்லை ஒரு ஏக்கர் 25 செண்டிற்கு தான் போட்டுள்ளனே. வா.சா.ஆ.10 தாவா சொத்திற்கு மட்டுமா அல்லது மொத்த சொத்திற்குமா என்றால் மொத்த சொத்திற்குண்டானது. மொத்த சொத்திற்கும் நான் தான் வரி கட்டுகிறேன் என்று தாவாவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. வாய்மொழி பாகப்பிரிவினையின் போது என் தந்தைக்கு என்ன வயது என்றால் 6, 7 வயது

இருக்கும். அப்போது நடந்த நிகழ்வுகள் குறித்து அவர் உடன் பிறந்தவர்கள் தான் சொல்ல இயலும் என்றால் அவர்கள் சொல்லி என் தந்தைக்கு தெரியும்.

5. என் தந்தையை கேட்டால் தான் இந்த வழக்கின் விவரங்கள் முழுவதும் அறிய இயலும் எனக்கு அதைப்பற்றி தெரியாது என்றால் ஆம். நான் சொல்வத போல் தாவா சொத்து ஒரு ஏக்கர் 25 செண்ட் கிடையாது என்றாலும், வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ஏக்கர் ஐந்தரை செண்ட் பிரித்துக் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு எந்த பாகப்பிரிவினையும் நடக்கவில்லை. பிரதிவாதிகள் பதில் உரையில் சொல்லியுள்ளது போல் ஒரே ஏக்கர் ஐந்தரை செண்ட் வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் பெறப்பட்டு அவர் அனுபவித்து வந்தார் என்றாலும், பிறகு அவது வாரிசுகள் இன்றைய தேதி வரையில் அவ்வாறு அனுபதவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

6. அவர்கள் அனுபவத்தில் உள்ள சொத்தை என்னிடம் குத்தகையோ அனுமதியோ கேட்ட வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 2018 என்பது வழக்கிற்காக நானாக ஏற்படுத்திக்கொண்டது என்றாலும், இந்த வழக்கிற்கு வியாஜீனமூலமே இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அனுபவித்து வரும் சொத்தில் எங்கள் யாருக்குமே உரிமையோ அனுபவமோ இல்லை என்றால் சரியல்ல 2018 வரை நாங்கள் தான் அனுபவித்து வந்தோம். ஏற்கெனவே என் தந்தை, தாத்தா கிராம தலையாரி பொறுப்பில் இருந்ததால் அதை பய்னபமுத்தி பட்டாவை பெற்றுக் கொண்டார்கள் என்றாலும், அதை வைத்து எங்கள் உரிமை என்ற கூறி வருகிறோம் என்றால் சரியல்ல.

7. தாவா பத்தி 4ல் ஆறுமுகம் அவர் தந்தை குள்ளனிடம் இருந்து வாங்கிய சொத்து என்று சொல்லியுள்ள விவரமே தவறு என்று சொன்னால் சரியல்ல. தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் பிரதிவாதிகளின் அறியாமையை பயன்படுத்தி, தயார் செய்த ஆவணத்தை கொண்டு எந்த பரிகாரமும் கேட்க இயலாது என்றால் சரியல்ல. பிரதிவாதியும் அவர் மகனும் படித்துள்ளார்கள். நான் கேட்டுள்ள பரிகாரம் நிலைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.